கரூர் மாவட்டம் , புகழூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை: திருமதி.வெ.ஹேமலதா.பி.ஏ,.

ந.க.எண். 835/2023/எப்1 நாள்.15,03.2024

பொருள்:- மனைப்பிரிவு –புகழூர் நகராட்சி –புன்செய்ப்புகழூர் தெற்கு கிராமம் சர்வே எண். 556/1C1A2 – ல் உள்ள 3.20 ஏக்கரில் உள்ள இடத்தில் 64 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப் பிரிவிற்கு அனுமதி கோரியது – இறுதி ஒப்புதல் – வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:- 1. உதவி இயக்குநர் காகிதப்புரம் புது நகர் வளர்ச்சி குழுமம் கரூர் மாவட்டம்,அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண். TKL30T80/2022/ TCP நாள். 14.06.2023.
2. மனுதாரரின் விண்ணப்பம் நாள்.04.01.2024.

* * * * *

உத்தரவு :-

பார்வை 1 ல் கண்டுள்ள உதவி இயக்குநர் காகிதப்புரம் புது நகர் வளர்ச்சி குழுமம் கரூர் அவர்களின் கடிதத்தில், புகழூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட புன்செய்ப்புகழூர் தெற்கு கிராமம் சர்வே எண். 556/1C1A2 – ல் உள்ள 3.20 ஏக்கரில் உள்ள இடத்தில் 64 குடியிருப்பு மனைகள் ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 ன் படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/Karur/Layout No. 16/2023 என எண்ணிடப்பட்டு சில நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2) ல் கண்டுள்ள தங்களின் விண்ணப்பத்தில் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க கோரியதின் பேரில் மனைப்பிரிவுக்கான செலுத்தவேண்டிய கட்டணங்கள் புகழூர் நகராட்சி கணக்குகளின் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே புகழூர் நகராட்சிக்குட்பட்ட புன்செய்ப்புகழூர் தெற்கு கிராமம் சர்வே எண். 556/1C1A2 – ல் 3.20 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் 64 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவுக்கு (SWP/DTCP/Karur/LayoutNo.16/2023) மனைப்பிரிவுகளுக்கு நகர் மன்ற தீர்மான எண். 538 நாள். 08.03.2024 ன் படி கீழ்கண்ட நிபந்தனைகளின் படி செயல்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்: –

1. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக எந்த மாற்றமும் செய்யக்கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் (SPLAY) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருத்தத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. இறுதி ஒப்புதல் பெறுவதற்கு முன்பு மனையிடத்தில் வேறு எந்த பரிமாற்றமும் செய்யக்கூடாது
4. வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்
5. மனைப்பிரிவில் கட்டிடங்கள் தனித்தனியாக மட்டுமே கட்டப்பட வேண்டும்
6. கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கும் பொழுது காகிதப்புரம் புது நகர் வளர்ச்சி குழுமம் இயக்குநர் அவர்களின் நிபந்தனையின்படி விதிகளைப் பின்பற்றப்பட வேண்டும்
7. மனைப்பிரிவிற்குள் மண் தோண்டி எடுக்க பள்ளங்களோ, குழிகளோ, ஏற்படுத்தக்கூடாது.
8. மனைப்பிரிவில் உள்ள அனைத்து சாலைகளிலும் நிழல் தரும் மரங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. ஒவ்வொரு மனையிடங்களில் கட்டிடம் கட்டும்போது உள்ளாட்சியில் தனியே விண்ணப்பித்து கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெறப்பட வேண்டும்

10. மனைப்பிரிவு சாலைகள் பாதிக்கின்ற வகையில் மனைப்பிரிவைச் சுற்றி சுற்றுச்சுவரோ, வேலியோ போடக்கூடாது

11. பத்திரப்பதிவு செய்யும்போது காகிதப்புரம் புது நகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் நிபந்தனைகளை பத்திரங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

12. மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற பின்னர் மனைப்பிரிவு சம்பந்தமான விவரங்கள் அனைத்தும் அறிவிப்புப் பலகை மூலம் தெளிவாக பார்வைக்கு வைக்க வேண்டும்.

13. உதவி இயக்குநர் காகிதப்புரம் புது நகர் வளர்ச்சி குழுமம் கரூர் SWP/DTCP/Karur/LayoutNo.16/2023-ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்திற்கும் கட்டுப்பட வேண்டும்.

14. வரைபடத்தில் கண்டுள்ள மனைப்பிரிவில் உள்ள மனைகளில் எவ்வித மாறுதல் அனுமதியின்றி செய்யக்கூடாது.

15. மனைப்பிரிவில் கண்டுள்ள வளர்ச்சிப்பணிகள் பழுது ஏற்படாமல் மனைகள் வழங்கப்படுவதுடன், நகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவிக்கும் கூடுதல் வளர்ச்சிப் பணிகள் தேவைப்படின் செய்து கொடக்கப்பட வேண்டும்

16. மேலும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 ல் தெரிவித்துள்ளபடி மனைப்பிரிவு விதிகள் அனைத்திற்கும் கட்டுப்பட வேண்டும்.

17. எக்காரணத்தைக் கொண்டும் பொது இடங்களை விற்பனை செய்யவோ, ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

18. பொது இடங்களை சுற்றி தற்போது சொந்த செலவில் கம்பி வேலி அமைத்து அதில் பொது உபயோக இடம் என விளம்பரப் பலகை அமைத்து தர வேண்டும்.

19. அனுமதிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள மனைகளை உரிய அனுமதியின்றி உட்பிரிவு செய்தல் கூடாது.

15.3.24

ஆணையாளர்,
புகழூர் நகராட்சி.

15/3/24

இணைப்பு : – புது நகர் வளர்ச்சி குழுமம் நகர் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை நிபந்தனைக்கள் மற்றும் மனைப்பிரிவு வரைப்படம்.

பெறுதல்: –
திரு. T.S.விக்ரம் செந்தூர்,
28, பிள்ளையார் கோவில் தெரு,
தோட்டக்குறிச்சி,
கரூர்.

நகல்: –
1. புது நகர் வளர்ச்சி குழுமம் நகர் உதவி இயக்குநர் காகிதபுரம்
2. உதவி இயக்குநர், நில அளவை துறை, கரூர்
3. சார்பதிவாளர், வேலாயுதம்பாளையம் அலுவலகம்.